1975 மார்ச் 11]

திரு. கு. திருப்பதி : கிருதுமால் நதி என்பது மதுரையில் ஓடுகின்ற சாக்கடைக்கு வேறு பெயர். அதை விரைவில் செயல் படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மதுரையில் எப்படி ஓடிவருகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. மதுரையில் இருப்பதைப் பற்றி ஆய்வில் இருப்பதாகத் தெரிவித்தேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த கிருதுமால் நதியின் குறுக்கே அணை கட்டவேண்டுமென்று பார்வேட் பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு. எ. ஆர். பெருமாள் அவர்கள் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிருரே, அதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அணை கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. நதியை ஆழப்படுத்தி, இரு கரைகளையும் பலப்படுத்த வேண்டுமென்றுதான் சொல்லி வருகிருர்கள்.

"மதுரைப்பாலம்" இரயில் நிலையத்தருகில் மேம்பாலம்.

*273 வினு.—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

"மதுரைப்பாலம்" இரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள தத்தநேரி இருப்புப் பாதையினைக் கடந்து செல்ல மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தற்போது இல்லை.

கோதுமை ஒதுக்கீடு.

*274 வினு.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தற்பொழுது மாதந்தோறும் மத்திய அரசு ஒதுக்கும் கோதுமையின் அளவு என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 1975 பிப்ரவரி மாதத்திற்கு மத்திய அரசு 41,000 டன் கோதுமை ஒதுக்கீடு செய்தது. மார்ச்சு மாதத்திற்கு 51,000 டன் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஒதுக்கீடு பொது விநியோக முறையின் கீழ் விநியோகத்திற்குச் செய்யப்படுகிறது. இதைத் தவிர சென்ற இரு மாதங்களாக மாதம் 9,000 டன் கோதுமை, அரைவு ஆலைகளுக்காகத் தனியாக ஒதுக்கப்படுகிறது.